[12th September 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No.

(*b*) Does not arise.

* 186 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the names of the Ministers who had been to the Devikulam-Peermedu Constituency of the Kerala State for election propaganda in connection with the election held on 16th May 1958; and

(*b*) the expenditure incurred therefor?

THE HON SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Only the Chief Minister and the Minister for Works visited Devikulam and Peermedu in May 1958. The Chief Minister toured at his own expense and the tour of the Minister for Works was private.

SRI N. K. PALANISAMI : கேரள மாநில மந்திரிகள் அந்தத் தேர்தலிலே சேர்ந்து கொள்ளாமல் இருந்தபோது, இங்கேயிருந்து மந்திரிகள் அங்கு சென்று பிரசாரம் செய்வது நியாயமா ?

MR. SPEAKER : The Hon. Minister said that it was a private visit. Then how does the question arise?

SRI A. V. P. ASAITHAMBI : மந்திரிகள் நாடு பூராவும் சுற்றும் போது, வெறுமனே சுற்றாமல், ஆங்காங்கே உள்ள கலெக்டர் ஆபீஸ், தாசில்தார் ஆபீஸ்களில் எந்த எந்த பைல்கள், எவ்வளவு காலமாகப் பெண்டிங்காக இருக்கிறது, எவ்வளவு தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதுபோன்ற தகவல்களை எல்லாம் சேர்த்துப் பார்த்து பிராயணங்களை பயன் உள்ளதாகப் பண்ணுகிறார்களா? அப்படியில்லையென்றால் இனிமேலாவது மந்திரிகள் அப்படிச் செய்வார்களா ?

MR. SPEAKER : மெம்பர் அவர்கள் பொதுவாக அட்வைஸ் கொடுக்கிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : தேவிகுளம், பீர்மேட்டில் பைல் பார்க்க நாங்கள் அனுமதிக்கப்படமாட்டோம்.

SRI V. K. KOTHANDARAMAN : தேர்தலுக்காக இல்லாமல், சொந்த பிஸினஸ் ஆக இருந்தாலும்கூட, போனபோது, சொந்த கார் உபயோகப்பட்டதா, அல்லது சர்க்கார் கார் உபயோகப்படுத்தப்பட்டதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்க்கார் கார் உபயோகப்படுத்தப்படவில்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : கேரள சமஸ்தானத்திற்கு, நம் சமஸ்தானத்திலிருந்து, போலீஸ் ஜீப் (நம் சர்க்கார் ஜீப்), தேர்தல் சமயத்தில் போய் இருந்ததா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தத் தகவல் என்னிடம் இல்லை. போகாது என்று நினைக்கிறேன்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : அப்படி மற்ற மந்திரிகள் வேறு பிரதேசத்திற்குப் போகக் கூடாது என்ற விதி ஏதாவது இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நாங்களும் மந்திரிகளானாலும், இந்தியப் பிரஜைகள்தான், எங்கு வேண்டுமானாலும் போகும் சுதந்திரம் எங்களுக்கும் உண்டு.

12th September 1958]

SRI N. MAHALINGAM : ஸ்ரீ கரையாளர் அவர்கள் திருவாங்கூர் பிரஜையாக இருந்த காரணத்தால், இன்னும் சென்னையை "சமஸ்தானம்" என்றே மதிக்கிறாரா ?

MR. SPEAKER : அது யாரைக் கேட்பது ? மந்திரியையா ?

SRI A. VEDARATHNAM : கேரள மந்திரிகள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடாவிட்டாலும், பர்மனன்ட் சர்விஸ் உத்யோகஸ்தர்கள் நேரிடையாக ஈடு பட்டார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

SRI M KALYANASUNDARAM : ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர், ஸார்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் சொல்லிவிடுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : No, I am on a point of order.

MR. SPEAKER : Let me hear him.

SRI M. KALYANASUNDARAM : How is this question in order, Sir ? It does not deal with our Government or our State.

MR. SPEAKER : Let the hon. Member, Sri Vedarathnam, please repeat the question. I did not catch the question.

SRI A. VEDARATHNAM : மந்திரிகள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்கள், அது தவறு என்று சொன்னார்கள். நான் கேட்டேன் அங்குள்ள பர்மனன்ட் சர்விஸ் உத்யோகஸ்தர்கள் நேரிடையாக ஈடுபட்டார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று.

MR. SPEAKER : What is the objection there ?

SRI M. KALYANASUNDARAM : He is asking about the services with regard to the elections conducted by the Kerala Government.

MR. SPEAKER : There is nothing wrong in asking the question. The Hon. Minister may reply that he does not know. (Laughter.) I am not suggesting any answer.

THE HON. SRI C. SUBRAMANIAM : கேரள அரசாங்க உத்தியோகஸ்தர்கள் என்ன பண்ணினார்கள் என்பதற்கு அதிகார பூர்வமான தகவல் கிடையாது.

• SRI A. GOVINDASAMY : கனம் அமைச்சர்கள் தேவிகுளம், பீர்மேடு முதலிய இடங்களுக்குச் சென்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்கள் என்பது உண்மையா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்காகத்தானே போயிருந்தார்கள். (சிரிப்பு.)

SRI D. S. AUTHIMOOLAM : திட்டங்கள் அநேகம் நிறைவேற்றுவதற்கு இருக்கும்போது மேடு, குளங்கள் போன்ற பல இடங்களுக்கு கனம் மந்திரிகள் போகலாமா ?

MR. SPEAKER : அந்தக் கவலை மந்திரிகளுக்குத்தான் ; உங்களுக்கு அதைப்பற்றி என்ன கவலை ?

Dakshina Pradesh

* 192 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have received any communication recently from the Chief Minister of Andhra